1995 மார்ச் 16]

தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். அது வருவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் அரசிடம் எந்தச் செயற்குறிப்பும் இல்லை என்பதைத்தான் நான் தெரிவித்தேன்.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தொழில் துறையிலே இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழகத்தை மூன்றாவது இடத்திற்கு கொண்டு வந்திருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில், இந்த நம்பியூர், புளியம்பட்டி போன்றவை வறட்சி மிகுந்த பகுதிகளாக இருக்கின்ற காரணத்தினால் அந்தப் பகுதி மக்களுடைய விவசாயக் கிணறுகளும் பொய்த்து விட்ட காரணத்தினால் பிழைப்பிற்காக திருப்பூர் போன்ற பகுதிகளுக்குச் சென்று கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மீண்டும் மறு பரிசீலனை செய்து, அந்தப் பகுதியில் பெரியார் மாவட்டத்திலே நிறைய பேர் தொழில் துவங்க வருகின்றார்கள். இப்போது பெருந்துறைப் பகுதியிலே ஒரு தொழிற்பேட்டையை நிறுவ இருக்கின்றார்கள். ஆகவே, இப்படி வருகின்றவர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆலோசனை சொல்லி, இந்தப் பகுதியிலே தொடங்கினால் ஆட்கள் நிறைய பேர் கிடைப்பார்கள். நிலமும் இலவசமாகக்கூட தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மீண்டும் மறு பரிசீலனை செய்து தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தது 20 தொழில் முனைவர் அங்கே தொழில் துவங்க முன் வந்தார்களேயானால் இதைப்பற்றி அரசு கனிவோடு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 34, திரு.என்.ஆர்.சிவபதி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

34—

உலக வங்கி உதவியுடன் முள்ளிப்பாடி பாசன வாய்க்காலில் தார்ச் சாலை அமைத்தல்

*** 36622**—*திரு. என். ஆர். சிவபதி:*

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1995 மார்ச் 16

உலக வங்கி உதவியுடன் முள்ளிப்பாடி பாசன வாய்க்கால் தலைப்பு இருபுறமும் சுமார் 10 கி.மீ. தூரம் கரைகள் மற்றும் கரும்புச்சாலை அமைப்பு திட்டத்தின் கீழ் தார்ச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. என். ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முள்ளிப்பாடி ஏரி 15 கிராமங்களின் விவசாயிகள் பயன்பெறும் வகையில் நீர்த்தேக்கம் உள்ள ஏரி. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் பகுதிக்கு வருகை தந்தபோது விவசாயிகளின் சார்பாக மனு கொடுத்தேன். வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் தூர் எடுத்து சீர் செய்து தருவதாக வாக்குறுதியும் தந்து வந்தார்கள். ஆகவே, அதுகுறித்து உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புவதோடு, இந்தப் பகுதியில் உற்பத்தியாகின்ற பணப் பயிர்களான வாழை, நெல், கரும்பு, வெற்றிலை ஆகியவைகளை மற்ற மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்ல ஏதுவாக அமையும். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், எங்கள் பகுதியின் விவசாயிகளுடைய நிலையை நன்கு அறிந்தவர்கள். ஆகவே, மறுபரிசீலனை செய்து இந்தச் தார்ச்சாலையை அமைக்க முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய மூலக் கேள்வி உலக வங்கி உதவியுடன் முள்ளிப்பாடி பாசன வாய்க்காலின் தலைப்பு இருபுறமும் சுமார் 10 கிலோ மீட்டர் தூரம் கரைகள் மற்றும் கரும்புச்சாலை அமைப்புத் திட்டத்தின் கீழ் தார்ச்சாலை அமைக்கப்படுமா என்பது. 1992-93-ஆம் ஆண்டு தமிழகத்தில் ஏற்பட்ட வெள்ளம், சூறாவளி, புயலால் பாதிக்கப்பட்ட வாய்க்கால்களை மறுசீரமைக்கவும் மற்றும் புதுப்பிக்கவும் 10 கோடியே 70 இலட்சம் ரூபாய் திட்டத்தில் 9 மாவட்டங்களில் செயல்படுத்த வேண்டுமென்று உலக வங்கியின் ஒப்புதலுக்கு தமிழக அரசு அனுப்பியது. உலக வங்கி அனுப்பிய அந்தச் செயற்குறிப்பில் முள்ளிப்பாடி வாய்க்காலும் சேர்க்கப்பட்டது. ஆனால் உலக வங்கி இதனை மறுத்துவிட்டது. எனவேதான், நான் முடியாது என்று அவரிடத்திலே குறிப்பிட்டேன். ஒவ்வொரு ஆண்டும் தூர்ந்துபோன வாய்க்கால்களை தூர் எடுப்பதற்கும் பாசன வசதியைப் பெருக்குவதற்கும் பொதுப்பணித் துறையைச் சார்ந்த நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு.கண்ணப்பன் அவர்கள் அதிகமான நிதியை ஒதுக்கி உள்ளார்கள்.

1995 மார்ச் 16]

அதில் திருச்சி மாவட்டத்திற்கும் ஒதுக்கப்படுகிறது. எனவே அந்தத் தொகையைக் கொண்டு இந்த ஆண்டு தூர் வாரப்படும் என்ற செய்தியைத்தான் அன்றைக்கு அந்தப் பகுதிக்கு வருகை தந்தபோது விவசாயிகளுக்கு நான் உறுதிமொழி தந்தேன். அது நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி, இருபுறமும் தார்ச்சாலை அமைக்கப்படுமா என்பது. தார்ச்சாலை அமைக்கப்படும் என்ற நிலை இருந்தாலும் இந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளின் நலன் கருதி, பொதுப்பணித்துறையினர் இப்போது 80 ஆயிரம் ரூபாயில் தூர் எடுத்து, சீர் செய்து அமைத்து இருக்கின்றார்கள். ஆனால், அதிலே முக்கிய குறைபாடு இருப்பது என்னவென்று சொன்னால், தூர் எடுப்பதற்கான வசதி எதுவும் இல்லை. ஏனென்று சொன்னால், அது பொறியியல் துறையின் மூலம் உள்ள இயந்திரங்களினால் தூர் எடுத்தால்தான் அந்தப் பகுதியில் ...

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. என். ஆர். சிவபதி: பொறியியல் துறையின் மூலம் எடுத்தால்தான் அந்தப் பகுதியில் தூர் எடுத்துச் செப்பனிட முடியும். ஆகவே, இப்பொழுது ஓரளவு சீர் செய்திருந்தாலும், அந்தப் பகுதிகளில் தார்ச்சாலை அமைத்து, விவசாயப் பெருங்குடிமக்கள் இந்தப் பணப் பயிர்களான வாழை, நெல், கரும்பு, வெற்றிலை எடுத்துச் செல்வதற்கு ஏதுவாக தார்ச்சாலை அமைக்க மீண்டும் அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே பாசன வாய்க்காலெல்லாம் இன்றைக்கு வேளாண் பொறியியல் துறையைச் சார்ந்த புல்டோசர் மூலமாகத்தான் தூர் வாரப்பட்டு வருகிறது. எனவே, அந்த அடிப்படையிலே இந்த ஆண்டும் முள்ளிப்பாடி வாய்க்கால் சீரமைக்கப்படும். ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்கின்ற அந்த வாய்க்காலுடைய இருகரைக்கும் தார்ச்சாலை போடுவதற்கு 18 கிலோ மீட்டருக்கு நீளம் உள்ள அந்தக் கரைகள்-அந்த இரண்டு கரைகளுக்கும் தார்ச்சாலை போட வேண்டுமென்று சொன்னால் தனியாருடைய நிலங்கள் ஆர்ஜிதம்

செய்யப்பட வேண்டும். ஆர்ஜிதம் செய்யப்படுவதோடு மட்டுமல்லாமல், அதற்கு 15 மீட்டர் அகலத்திற்கு ரோடு போட வேண்டும். அவற்றில் ரோடு போடுவதற்கு இன்றைக்கு 3 கோடியே 3 இலட்சம் செலவாகும் என்று கரும்பு அபிவிருத்தித் துறையைச் சார்ந்த பொறியியல் வல்லுநர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்த 3 கோடி ரூபாய் இன்றைக்கு அந்தத் துறையிலே கையிருப்பு இல்லாத காரணத்தினால் முடியாது என்ற பதிலை மாண்புமிகு உறுப்பினருக்குத் தந்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 35, திரு. காஞ்சி பன்னீர்செல்வம், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

35—

உத்திரமேரூர் தொகுதியில் பால் குளிரூட்டும் தொழிற்சாலை அமைத்தல்

*** 35947**—திரு. காஞ்சி பன்னீர்செல்வம்:

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர் தொகுதியில் பால் குளிரூட்டும் தொழிற்சாலை (Chilling Centre) அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது தேசிய பால்வள வாரியம் மூலம் உத்திரமேரூரிலிருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள சாலூர் என்ற இடத்தில் புதிதாக ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்படவுள்ளதால், உத்திரமேரூர் தொகுதியில் தற்போது பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உத்திரமேரூருக்கு அருகே தனி குளிரூட்டும் நிலையம் அமைக்க இருப்பதால் உத்திரமேரூரிலே அமைக்க இயலாது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி உத்திரமேரூர் பகுதியிலே அமைக்க இயலவில்லை என்று சொன்னாலும் அடுத்து என்னுடைய தொகுதியிலே வாலாஜாபாத் நகரம் இருக்கிறது. அந்தப் பகுதியிலே ஒரு குளிரூட்டும் நிலையத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உத்திரமேரூர் தொகுதிக்கு உட்பட்ட உத்திரமேரூர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS